5th August 1966]

*121 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நெல் விலையை உயர்த்த உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMIAH : No.

திரு. செ. மாதவன்: நெல் விலையை மட்டும் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய மற்ற பொருள்களின் விலையை நிர்ணயிக்கவில்லை. 1947-48-ல் தமிழக அரசாங்கம் செய்ததுபோல நெல் விலைக்கு சப்சிடி கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

*122 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரக்கோணம் தாலுக்காவில் பனப்பாக்கம், தக்கோலம், நெமிலி, புதுகேசாவரம் ஆகிய ஊர்களில் நெல் கொள்முதல் செய்ய எஸ். ஜே. ராமசாமி, எம்.எல்.ஏ. அவர்களிடமிருந்து 7—12—1965 அன்று கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) ஆம்.

(இ) உறுப்பினர் குறிப்பிட்ட கிராமங்களில் கிடைக்கும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்த நான்கு கிராமங்களிலும் 7—12—1965 வரை 491.5 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டதென்றும் 7—12—1965-லிருந்து 26—3—1966 வரை 7,011.75 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டதென்றும் மொத்தம் 7,503.25 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்றும் கலெக்டர் அறிவித்துள்ளார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்தக் கேள்வி போட்டே ஏறக்குறைய ஒரு வருடம் ஆகிறது. அப்பொழுதிருந்தே மழை பெய்த காலத்தில் நெல் கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லாமல் இருந்தது. இந்தக் குறையை இனிமேலாவது சர்க்கார் நிவர்த்திப் பார்களா?

கனம் சபாநாயகர்: எப்படி ஒரு வருஷமாகும்? கனம் அங்கத்தினர் கோரிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்வது 7—12—1965-ல் தானே?